பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 21 செவ்வாய்க்கிழமை 05.07.2022 கதிர் 242

### இனி இது ரகசியம் அல்ல!

கூட்டமைப்புப் பேச்சாளர் பதவியை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வகிக்கின்றமை பலருக்குக் குடைச்சலை கொடுக்கின்றது போலும்.

அது தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் கிளப்பி வரும் சர்ச்சைக ☞2

# அனைவரும் ஒன்றிணையாவிடின் நாடு மீளெழ இயலாது நாசமடையும்



## எதிர்க்கட்சி தலைவர் சஜித் எச்சரிக்கை

கடந்த 3 ஆண்டுகளில் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் மற்றவர்கள் சொல்வதைக் காதில் வாங்காமல், தாங்கள் மாத்திரம்தான் சரி என்று எண்ணிச் செயற்பட்டமையால் நாடு தற்போது பெரும் பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் நாடு மீளெழ முடியாதவாறு நாசமடைந்து போகும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாரிய வீழ்ச்சியடைந்துள்ள ☞2

# பிச்சைக்கார நாடாக்கியது ராஜபக்ஷ குடும்பத்தினரே!

## யாழ்.ஆயர் பகிரங்கக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜுலை 05

வளங்கள் நிறைந்த இலங்கையைப் பிச்சைக்கார நாடாக மாற்றியமைத்த பெருமை ராஜபக்ஷ குடும்பத்தாரையும் தற்போதைய ஆட்சியாளர்களையுமே சேரும்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் தெரிவித்தார் ☞2

## ரயில் விபத்தில் குடும்பஸ்தர் பரிதாபச் சாவு



(வவுனியா நிருபர்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ☞06

## இந்திய மீனவர் ஐந்து பேர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுலை 05

இலங்கை கடற் பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீனபிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 5 பேர் ஒரு படகுடன் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் ☞2

## தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து ஒன்றரை வயது குழந்தை உயிரிழப்பு

### யாழ். பொன்னாலையில் சோகம்

யாழ்ப்பாணம், பொன்னாலைப் பிரதேசத்தில் நேற்று தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து ஒன்றரைவயதுபெண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

பொன்னாலை – சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த யசோதரன் யஸ்மிகா எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை வீட்டு முற்றத்தில் விளையாடிக் ☞2


## மைத்திரி - சஜித் முக்கிய சந்திப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் ☞2

## சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு நடத்திய பேச்சு தோல்வியா?

### சபையில் இன்று பிரதமர் விளக்கம்



சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு நடத்திய பேச்சு தோல்வியடைந்துள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனவே, இது தொடர்பில் அரசு உண்மை நிலைமையை வெளிப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. நேற்று நாடாளுமன்றில் கேட்டுக் கொண்டார். ☞2

## தப்பிய கைதிகளில் 44 பேர் தொடர்ந்தும் தலைமறைவு

பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற கைதிகளில் 44 பேர் தொடர்ந்தும் தலைமறைவாக இருக்கின்றனர் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## மாணவர் ஒன்றியத்துக்கு புதிய பிரதிநிதிகள் தெரிவு




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய தெரிவு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. ☞2

### சர்வதேச குத்துச் சண்டை போட்டியில்

## தங்கப் பதக்கம் வென்று அசத்திய வவுனியா வீராங்கனை டிலக்சினி



பாகிஸ்தானில் நடைபெற்ற மூன்றாவது சவாட் சர்வதேச குத்துச் சண்டை போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த டிலக்சினி கந்தசாமி தங்கப் பதக்கம் வென்று வடக்கு மாகாணத்துக்கும் இலங்கைக்கும் ☞2

## நால்வர் அடங்கிய குடும்பமே மாடி வீட்டுத் தீ விபத்தில் பலி

### படுகாயமடைந்த இளைய மகளும் சாவு

ஹோமாகம, மாகம்மன பிரதேசத்தில் கடந்த 25ஆம் திகதி இரவு இரண்டு மாடி வீடொன்றில் உள்ள அறையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தீக்காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்த சிறுமியும் உயிரிழந்துள்ளார்.

பொரளை லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ரிதுஷி ரணசிங்க என்ற 6 வயது ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ளுக்குச் சூடான பதிலடி தந்து விடயத்தை முடித்து வைத்திருக்கின்றார் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன்.

கூட்டமைப்புப் பேச்சாளர் பதவி குறித்து கொழும்பு தமிழ் வார இதழின் அரசியல் பத்தி ஒன்றில் 'மீண்டும் சர்ச்சையில் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி' என்ற உப தலைப்பில் ஒரு செய்தி வெளியாகி இருக்கின்றது. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உத்தியோகபூர்வமான பேச்சாளர் ஒருவர் இல்லை என்று ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அப்பதவியில் இருந்த சுமந்திரன் அதிலிருந்து நீங்கி உள்ளார் எனவும், அந்தப் பதவிக்காக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனினதும், தமிழரசு கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனினதும் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"எனினும் சம்பந்தன் இந்த விடயத்தில் உரிய தீர்மானம் எடுக்காமையினால் புதிய பேச்சாளர் குறித்த அறிவிப்பு இன்னமும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. இதனால் அந்தப் பணியை தொடர்ந்தும் சுமந்திரன் மேற்கொள்கின்றார். இதனை சித்தார்த்தனும் உறுதிப்படுத்தி உள்ளார்.

"இவ்வாறான நிலையில் தற்போது ஊடகங்கள் சுமந்திரனைத்தான் பேச்சாளர் என்று குறித்துரைக்கின்றன என்பது சுரேந்திரனின் விசனமாக உள்ளது. மறுபக்கத்தில் புதிய பேச்சாளர் நியமிக்காமையினால் அப்பதவியில் தான் தொடர்ந்து நீடிக்க வேண்டிய நிலைமை தமக்கு ஏற்பட்டுள்ளது என்கிறார் சுமந்திரன்.

"ஆக நாட்டின் நெருக்கடிகளுக்கு மத்தியில் கூட்டமைப்பினுள் மீண்டும் பேச்சாளர் பதவிக்கான சர்ச்சை மேலெழுந்திருக்கின்றது" - இப்படி அந்த வார இதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் குறித்து நேற்று இரவு சம்பந்தனோடு தொடர்பு கொண்டு பேசினோம்.

"கூட்டமைப்புப் பேச்சாளர் குறித்து எந்தச் சர்ச்சையும் இல்லை. சுமந்திரன் தான் பேச்சாளர். நான்தான் - சம்பந்தன் தான் - கூட்டமைப்பின் தலைவர். அது கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி எடுத்த முடிவு. அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்" - என்றார் சம்பந்தன்.

கூட்டமைப்புக்கு உத்தியோகபூர்வ பேச்சாளர் இல்லை என்று இப்பொழுது ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் விசனம் தெரிவிக்கின்றாரே என்று சம்பந்தனிடம் கேட்டதற்கு -

"இத்தகைய சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களுக்கு எல்லாம் நான் பதில் கூற முடியாது. இலங்கைத் தமிழரசு, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டுத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதன் நாடாளுமன்றக் குழுவின் தீர்மானப்படி நான்தான் தலைவர். சுமந்திரன் பேச்சாளர். அவ்வளவுதான்" - என்று காட்டமாகக் கூறி சர்ச்சைக்கு ஒரே யடியாக முற்றுப்புள்ளி வைத்தார் சம்பந்தன்.

இப்படி நான் முற்றுப்புள்ளி என்று குறிப்பிடுவதுதான் புதிய சர்ச்சைக்கான ஆரம்பமோ யானறியேன்.

- மின்னல் -

## தண்ணீர் வாளிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொண்டிருந்த வேளை, அருகில் இருந்த 20 லீற்றர் கொள்வனவுடைய தண்ணீர் வாளிக்குள் இருந்த கரண்டி ஒன்றை எடுக்க முற்பட்டவேளை, வாளிக்குள் தலைகீழாக விழுந்து நீரில் மூழ்கியுள்ளது.

அதை அவதானித்த வீட்டார் குழந்தையை மீட்டு மூளாய் வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

## நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறுமியே உயிரிழந்துள்ளார் என்று கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்றபோது குறித்த சிறுமியின் தாய், தந்தை மற்றும் மூத்த சகோதரி ஆகியோர் அறைக்குள் இருந்துள்ளதுடன், அவர்கள் ஹோமாகம ஆதார வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தந்தையும் தாயும் சேர்க்கப்பட்ட அதே நாளில் உயிரிழந்தனர். மேலும் மூத்த மகள் சம்பவம் நடந்து மூன்று நாள்களுக்குப் பிறகு உயிரிழந்தார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 6 வயது இளைய மகள் பொரளை லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதன்போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக அ.விஜயகுமார் கலைப்பீடத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டார்.

அதேவேளை, செயலாளராக எஸ். ராவீன் விஞ்ஞான பீடத்திலிருந்தும், பொருளாளராக எஸ். சேந்தன் முகாமைத்துவ பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன,

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் ஆகியோர், இலங்கையின் நிதி நெருக்கடிகளை வெற்றிக்கொள்ளும் வகையில் பேச்சுகளை நடத்தி வருகின்றனர். இந்தநிலையில் இது தொடர்பில், நாளை (இன்று) பிரதமரால் நாடாளுமன்றில் தெளிவுபடுத்தப்படும் - என்றார்.

## தங்கப் பதக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெருமை சேர்த்துள்ளார்.

இந்தப் போட்டியில் இலங்கையிலிருந்து 13 போட்டியாளர்கள் (4 ஆண்கள், 9 பெண்கள்) பங்கேற்றனர்.

இவர்களில் 9 பேர் தங்கப் பதக்கத்தையும், 4 பேர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

போட்டியில் பங்கேற்ற வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வவுனியா வீராங்கனை டிலக்சினி கந்தசாமி சிறப்பாகச் செயற்பட்டு தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டிலக்சினி கந்தசாமி பெரும் கஷ்டத்துக்கு மத்தியிலும் தனது விடாமுயற்சியாலும், தொடர் பயிற்சியாலும் சர்வதேச ரீதியில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

ஏற்கனவே பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பல பதக்கங்களை வென்ற டிலக்சினி, இன்று சர்வ தேச ரீதியிலும் தங்கப் பதக்கத்தை வென்று வடக்கு மாகாணத்துக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் சப்ரகமுவ பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ கற்கை நெறி அலகு மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்பிய கைதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)கடந்த வாரம் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது அங்கிருந்த 998 கைதிகளில் 726 பேர் தப்பிச் சென்றிருந்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் இதுவரை 682 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய 44 பேர் பற்றிய எந்தவித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை என்றும், அவர்கள் தொடர்ந்தும் தலைமறைவாக உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தங்கள் உறவினர் அல்லது நண்பர்களின் வீடுகளில் தலைமறைவாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

எனவே, அவர்களைக் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் அல்லது வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பிச்சைக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

74 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டவர்கள் மக்களைத் தம்முடைய வாக்குகளுக்காகப் பயன்படுத்தினார்களே தவிர அவர்களது வாழ்க்கை முன்னேற்றம் தொடர்பில் சிந்திக்கவில்லை. மாறாக இந்த நாட்டிலிருந்த வளங்களையெல்லாம் சுரண்டி விட்டார்கள். ஒருவிதமாக கடைசியில் மிகப் பாரதூரமான சுரண்டல்களுடன் நாடு பிச்சை எடுக்கின்ற நாடாக மாற்றியமைத்துவிட்டார்கள்.

'இந்து சமுத்திரத்தின் முத்து' என்று சொல்லப்பட்ட எமது நாடு இன்று பிச்சை எடுக்கின்ற நாடாக மாறியுள்ளது. இதற்குக் காரணமான அனைவருமே மறுமொழி சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஏனென்றால் மக்களை இந்த நாட்டின் குடிமக்களாக ஆட்சியாளர்கள் பார்க்கவில்லை. ஆனால், மக்களைத் தமது வாக்குகளுக்காக அவர்கள் பாவித்துள்ளார்கள்.

மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றிருக்கின்றார்கள். அவ்வாறு நாட்டு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று நாட்டைச் சுரண்டியதால் நாடு இவ்வாறு படுகுழியில் போய் விழுந்துள்ளது.

அண்மையில் இலங்கை வந்த சர்வதேச நாணய நிதியத்தினர் பல கேள்விகளைக் கேட்க இருந்தனர். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் 37 கேள்விகள் அவர்களால் கேட்கப்பட இருந்தன. அதாவது ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் கேள்விகளைக் கேட்க இருந்தார்கள். ஆனால், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். அதனால் அவர்கள் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்காது சென்று விட்டார்கள்.

எந்த நாடும் எமக்கு உதவிச் செய்ய தயாராக இருக்கின்றது. ஆனால், இந்த ஊழல், மோசடி நிறைந்த அரசை நம்பி எந்த நாடும் நமக்கு உதவுவதற்குத் தயாராக இல்லை. அதனை முதலில் நிவர்த்தி செய்தால் மாத்திரமே எமக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கும். ஆனால், அதற்கு பொறுப்பானவர்கள் ஓடி ஒளிந்து விட்டார்கள். இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களின் பெருந்தன்மையால் இந்த நாடு ஒரு பிச்சைக்கார நாடாக மாறிவிட்டது - என்றார்.

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடற்பரப்பில் வைத்து மடக்கப்பட்ட இந்த இந்தியப் படகு மயிலிட்டி துறைமுகம் கொண்டு செல்லப்படவிருந்தது.

கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். நாகைபட்டினம் மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த ஞாஹிம்/06/னினி-477 இலக்க படகே இவ்வாறு பிடிபட்டுள்ளது.

## மைத்திரி - சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரேமதாஸவுக்கும் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை, அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் சர்வ கட்சி அரசு தொடர்பில் கவனம் செலுணத்தப்பட்டு கலந்துரையாடல் இடம்பெற்றது என அறியமுடிந்தது.

## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான 'தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தகட்ட பயணம்' என்ற வேலைத்திட்டத்தின் தீர்மான மிக்க கூட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வாதிகாரம் இன்றி அனைவரது கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் சமூக சீர்திருத்தத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் செவிமடுக்கின்றோம்.

பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இறுதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கமாகும். அந்த நிகழ்ச்சி நிரலின் ஊடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரஞ்சித் மத்தும பண்டார, சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.வி.விக்னேஸ்வரன், பி.திகாம்பரம் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், ஜனரஞ்சன, காமினி வியங்கொட, ரொஹான் சமரஜீவ உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உயிராயுதம்

**தமிழர்களுடைய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் 2009 மேயுடன் முடிவுக்கு வந்தது.**

**இலங்கைத் தீவை பெரும் ரணகளத்துக்குள் ஆழ்த்திய அந்தப் போராட்டத்தில், எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள், தங்களிலும் விட எண்ணிக்கையில் ஏழு மடங்கு கொண்ட பேரினத்தின் படைகளோடு சிறிய கரந்தடிப்படையாக ஆரம்பித்து சுமார் முப்பதாண்டு காலம் வீரச் சமர் புரிந்தனர்.**

**ஒரு நாடு என்ற முழுக் கட்டமைப்போடு, முழு சர்வதேச உலகின் ஆதரவோடு, நவீன ஆயுதங்கள் சகிதம் பேரழிவு யுத்தத்தை முன்னெடுத்த இலங்கைப் படைகளுக்கு நிகராகக் களச் சமராடியது தமிழர்களின் சுதந்திரப் போராட்ட இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பு.**

**எண்ணிக்கையில் மிக சொற்பமான வீரர்கள், நவீன ஆயுதவசதிகளோ, தளபாடங்களோ – ஏன் இராணுவக் கல்விக் கட்டமைப்புக் கூட – இல்லாமல் – ஒரு கரந்தடிப் படையாக ஆரம்பமான விடுதலைப் புலிகள், தங்கள் தாயகப் பிரதேசத்தை ஒரு கட்டமைக்கப்பட்ட தேசமாக எழுச்சியுறச் செய்வதற்கான முழு கட்டமைப்புகளையும் உருவாக்கும் அளவுக்கு மேம்பாட்டார்கள்.**

**தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற முப்படைகள், பொலிஸ், நீதித்துறை என்று ஒரு தேசக்கட்டமைப்புடன் எழுச்சி பெற்றது அந்த அமைப்பு.**

**எண்ணிக்கையில் சொற்ப குழுவினரோடு, பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்யப்பட்ட பின்னடைவுகளுக்கு மத்தியிலும் ஒன்றரை, இரண்டு தசாப்தங்கள், சிங்கள முப்படைகள் மற்றும் ஆட்சிப் பீடத்தின் கண்களுக்குள் கைவிரலை விட்டு ஆட்டும் கைங்கரியத்தை – தொல்லையை – அவர்களால் சாதிக்க முடிந்து எங்ஙனம் என்று பலரும் வியக்கின்றனர்.**

**தளராத பற்றுதியும், கொள்கைத் திடசங்கற்பமும், ஒழுக்கமும் கொண்ட தலைமை, இனத்துக்காக – தம் மக்களுக்காக – எக்கணமும் தம்மையே தற்கொடையாகக் கொடுக்கும் ஈகமும், வீரமும், அஞ்சாத நெஞ்சமும், தளராத தைரியமும் கொண்ட தமிழ் மறவர் படை, தந்திரோபாயம் மிக்க தாக்குதல் வியூகங்கள், துல்லியமான திட்டங்கள் என்று பல்வேறு காரணங்கள் இருந்தாலும் உலகையே விடுதலைப் புலிகள் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த வீரகாவியங்களைப் படைத்தவர்கள் கரும்புலிகள்தான்.**

**அவர்களை நெருப்பு மனிதர்கள் என்றார்கள். தலைவர் பிரபாகரனின் கூற்றில் அவர்கள் உயிராயுதங்கள். தனித்து ஒருவராகத் தன்னைத் தன் மக்களுக்காக ஈகம் செய்தவன் மூலம் எதிரிக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தி, எதிரிப் படைகளை துவம்சம் செய்த கரும்புலிகள் ஒவ்வொருவரும் ஒரு தனி இராணுவப் படைக்கு ஒப்பானவர்கள்.**

**முதல் கரும்புலி கப்டன் மில்லர் தனது உயிரை ஈகம் செய்த 35ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று.**

**கப்டன் மில்லரின் தாக்குதல் நடந்து சரியாக மூன்று வாரத்துக்குள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமைக்கான காரணத்தை 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை பின்வருமாறு விவரித்தார்:–**

**"புலிகளின் தற்கொலைத் தாக்குலுக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சரிப்பட்டு வராது, அரசியல்தீர்வு ஒன்றுதான் ஒரே வழி என்ற முடிவை நான் எடுத்தேன். அதன் பின்னர்தான் இந்தியாவுடன் பேச்சு நடத்தி, பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஒப் பந்தம் செய்தேன்." – என்றார்.**

**தலைவர் பிரபாகரனின் அந்த உயிராயுதம் இன்று உலகெங்கும், எண்ணிக்கையில் குறைந்த – நீதிக்காக உச்சத் தியாகத்துடன் போராடும் – எல்லா மக்களுக்கும் வழிகாட்டல் தந்திரோபாயமாக இருப்பது மறுக்கப்பட முடியாதது. அணுப்ஆயுதங்களை வைத்திருக்கும் வல்லரசுகளுக்குக் கூட அந்தத் தற்கொலைத் தாக்குதல் முறைமை சிம்ம சொப்பனமாக இருப்பதும் மறுக்க முடியாதது.**

# பதுங்கு குழிக்குள் பதுங்கியிருந்து நாட்டை நிர்வகிக்காது பதவி விலகுங்கள்!

## ரஞ்சித் மத்துமபண்டார கோரிக்கை



ஊடகங்களை முடக்குவதற்காகவே அரசாங்கம் எரிபொருள் விநியோகத்தில் அவற்றை புறக்கணித்துள்ளது. இவ்வாறான ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்னின்று செயற்படும். பதுங்கு குழிகளுக்குள் மறைந்திருந்து நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்காமல் பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மக்கள் கோரியதைப் போன்று 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதாக கடந்த மே மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்தார்.

அத்தோடு நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். ஆனால் தற்போது அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22 ஆவது அரசமைப்பு திருத்த 19 உடன் ஒப்பிடும் போது ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிப்பதாகவே காணப்படுகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார். கோட்டாபய – ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கம் அல்ல.

அதன் காரணமாகவே முறையான சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு மகாசங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவற்றவரைப் போன்று இன்னும் தனது கதிரையை பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிட்டுள்ளதைப் போன்று இன்னும் இரண்டு ஆண்டுகள் பதவியில் நீடிப்பாராயின் உண்பதற்கு உணவின்றி, நோய்க்கான மருந்துகள் இன்றி மக்கள் உயிரிழக்கும் நிலைமையே ஏற்படும். தற்போது ஊடகங்களை முடக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

அதன் காரணமாகவே ஊடகங்களை அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்காமல், அவற்றுக்கு எரிபொருளை விநியோகிக்காமலுள்ளது. ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும்.

இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடும் அரசாங்கத்தை விரட்டியடித்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுகின்றோம்.

அத்தோடு பதுங்கு குழிகளுக்குள் மறைந்திருந்து நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்காமல் பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துகின்றோம். – என்றார்.

# அத்தியாவசிய தேவையான பால்மா வகைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு முடிவு!

இலங்கைக்குத் தேவையான பால்மாவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை அவசரத் தேவையாகக் கருதி, இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், நாட்டுக்குத் தேவையான பால் மாவை பெருமளவு இறக்குமதி செய்வதற்கும் இந்தியா ஒத்துழைப்புத் தெரிவித்துள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தி துறைகளில் அதிக ஒத்துழைப்பை வழங்குவதற்கான விடயங்களை ஆராய இந்திய ஆய்வுக் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும் எனவும் இந்தியாவின் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அமைச்சரின் பணிப்புரையின் கீழ், தற்போதுள்ள பால் தொழில்துறையின் கீழ் பல்வேறு அம்சங்களில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான தற்போதைய கடன் திட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து பால் மாவை இறக்குமதி செய்ய முடியும் எனவும், இது இலங்கையில் உள்ள குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு பங்களிக்கும் எனவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அனைத்து வழிகளிலிருந்தும் பால் மாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இரு தரப்பினரும் தீர்மானித்துள்ளனர்.

# எரிபொருள் நெருக்கடிக்கு நான் பொறுப்பாளி அல்லன்!

## சுப்ரீம் குளோபல் ஹோல்டிங்ஸின் தலைவர் மணிவண்ணன் மறுப்பு



எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களை சீர்குலைத்தது யார்? என்ற தலைப்பில் அண்மையில் வெளியான செய்தியை சுப்ரீம் குளோபல் ஹோல்டிங்ஸின் தலைவர் ஆர்.எம்.மணிவண்ணன் மறுத்துள்ளார்.

மேற்படி செய்தி தவறானது என்றும், எனவே அந்தக் கட்டுரையில் உள்ள குற்றச்சாட்டுகளை வன்மையாக நிராகரிக்கிறேன் எனவும் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பிரபலவர்த்தகர் ஆர்.எம்.மணிவண்ணன் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தவறுதலாக நம்பிக்கை வைத்ததன் காரணமாகவே எரிபொருள் நெருக்கடியை தீர்க்க முடியவில்லை என ஸ்ரீலங்கா மிரர் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

எரிபொருளை இறக்குமதி செய்ய கடன் பத்திரங்களை திறப்பதாக முதலில் மணிவண்ணன் உறுதியளித்தார் எனவும், பின்னர் டொலர் இல்லாமல் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாது என்று கூறினார் எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் முழு திட்டமும் பொய்த்து போனதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்திருந்தன என ஸ்ரீலங்கா மிரர் குறிப்பிட்டிருந்தது.

பிரபல கோடீஸ்வர தொழிலதிபர் மணிவண்ணன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் ரோஹித ராஜபக்ஷவின் 'சுப்ரீம்சாட்' திட்டத்திற்கு நிதியளித்தவர் எனவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே மேற்படி செய்தியைமறுத்து மணிவண்ணன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் நான்கு கப்பல்களில் எரிபொருள் இலங்கைக்கு அனுப்புகின்றது இந்தியா!



எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அண்டை நாடான இலங்கைக்கு இந்தியா மீண்டும் உதவி வழங்க முன்வந்துள்ளது. டீசல் மற்றும் பெற்றோல் அடங்கிய தலா இரண்டு கப்பல்களை இந்தியா அனுப்பவுள்ளது.

ஜூலை 13 மற்றும் 15 க்கு இடையில் ஒரு கப்பல், மற்றும் ஜூலை 29 மற்றும் 31 க்கு இடையில் மற்றொரு கப்பல் இலங்கையில் எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியாக ஓகஸ்ட் 10 மற்றும் 15 க்கு இடையில் தீவு நாட்டை சென்றடையும் என்று கொழும்பை தளமாகக் கொண்ட ஆதாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிற்கும் இந்தியப் பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் எரிபொருள் விநியோகம் செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மொரகொட இலங்கையின் அவசர ஆற்றல் தேவைகளை பூரிக்கு விளக்கினார்.

கடந்த மூன்று மாதங்களில் இந்தியாவிடமிருந்து 400,000 தொன்னுக்கும் அதிகமான எரிபொருளை இலங்கை பெற்றுள்ளது.



தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க பெற்றோலியத் துறையில் இந்தியாவும் இலங்கையும் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்தும் மொரகொட மற்றும் பூரி விவாதித்தனர் எனந் உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. பெற்றோலியம், எண்ணெய், எரிவாயு மற்றும் தொடர்புடைய விநியோகத் துறைகளில் நீண்டகால உறவுகளை ஏற்படுத்துவது குறித்தும் இருவரும் பேசினர்.

புதிய ஏற்றுமதி வந்து சேரும் வரையில் இலங்கையில் தற்போதுள்ள டீசல் கையிருப்பு அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

இந்தியாவிலிருந்து ஜூலை மாதத்தில் சுமார் 33,000 மெற்றிக் தொன் எரிவாயு இலங்கைக்கு வரும் என்றும், அடுத்த நான்கு மாதங்களுக்கு 100,000 மெட்ரிக் தொன் எரிவாயு கொள்வனவு செய்யப்படும் என்றும் இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதின் பின்னர் இப்போதுதான் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனால் உணவு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடுமையான வெளிநாட்டு நாணய நெருக்கடியுடன் கிட்டத்தட்ட திவாலாகி விட்ட நாடு, 2026 ஆம் ஆண்டுக்குள் செலுத்த வேண்டிய சுமார் 25 பில்லியன் டொலர்களில் இந்த ஆண்டுக்கான கிட்டத்தட்ட 7 பில்லியன் டொலர் வெளிநாட்டுக்கடனைத்திருப்பிச்செலுத்துவதை நிறுத்தி வைப்பதாக ஏப்ரல் மாதம் அறிவித்தது.

பொருளாதார நெருக்கடி குறிப்பாக உணவுப் பாதுகாப்பு, விவசாயம், வாழ்வாதாரங்கள் மற்றும் சுகாதார சேவைகளைப் பெறுதல் ஆகியவற்றைப் பாதித்துள்ளது. கடந்த அறுவடைப் பருவத்தில் உணவு உற்பத்தி முந்தைய ஆண்டை விட 40 முதல் 50 வீதம் குறைவாக இருந்தது. மேலும் தற்போதைய விவசாய பருவத்தில் விதைகள், உரங்கள், எரிபொருள் மற்றும் கடன் பற்றாக்குறை போன்ற ஆபத்து உள்ளது.

**(மூலம்: 'எக்கனமிக் ரைம்ஸ்')**

# பிரான்ஸ் - ஆஸி - இந்தியா முக்கூட்டின் இந்தோ -பசுபிக் பிராந்திய மூலோபாயம்

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கிய பங்காளிகளான பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை - சீனாவின் ஆக்கிரமிப்பு தோரணையின் மீதான கவலைகளுக்கு மத்தியில் - இந்தியப் பெருங்கடல் பகுதியை ஸ்திரப்படுத்த புதுடில்லியை உள்ளடக்கிய முத்தரப்பு நடவடிக்கைகளுக்கு புத்துயிர் கொடுப்பதைக் கவனத்தில் எடுத்துள்ளன.

புதிய ஆஸ்திரேலிய பிரதமரின் பாரிஸ் விஜயத்தின் போது - கடந்த வெள்ளிக்கிழமை - இது பற்றிய விடயம் தெரியவந்துள்ளது.

பிரான்ஸுடனான நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை ரத்து செய்து, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உதவியுடன் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெறுவதற்கு ஆஸ்திரேலியா மேற்கொண்ட முடிவைத் தொடர்ந்து பிரான்ஸ் முரணிலைமையை வளர்த்ததைத் தொடர்ந்து, இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இந்த முத்தரப்பு இணக்கம் பின்னடைவு கண்டிருந்தது.



பிரான்ஸ், ஆஸ்திரேலியத் தலைவர்கள் தமது துணைவியருடன்

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், வெள்ளிக்கிழமை பாரிஸில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனைச் சந்தித்தபோது, பிரான்ஸுடனான உறவுகளில் புதிய தொடக்கம் என்று அழைத்ததை வரவேற்றார்.

கடந்து சென்றவை கடினமான காலங்கள் என்ற கூற்றை ஒப்புக்கொண்ட மக்ரோன், இரு நாடுகளின் மூலோபாய கூட்டாண்மை, ஐரோப்பாவில் அவர்களின் பகிரப்பட்ட போர் வரலாறு மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மைக்கான அவர்களின் கூட்டு நலன்களை வலியுறுத்தினார்.

முந்தைய ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், அமெரிக்கா வடிவமைத்த நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்க இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தி, 2016 இல் பிரான்ஸுடன் கையெழுத்திட்ட ஐயாயிரம் கோடி ஆஸ்திரேலிய டொலர்கள் (3,300 கோடி யூரோக்கள்) நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை கைவிட்ட பிறகு நட்பு நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா இடையே முரணிலை ஏற்பட்டது.

"ஆஸ்திரேலியாவும் பிரான்ஸும் ஒரு புதிய பாதுகாப்பு உறவை உருவாக்கி, செயல்பாட்டு ஈடுபாடு மற்றும் புலனாய்வுப் பகிர்வு உட்பட, பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களில் எங்களது ஒத்துழைப்பை வலுப்படுத்துவோம் என்று ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் தலைவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பிராந்திய மன்றங்களில் செயலில் ஈடுபடவும், பசுபிக் நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை - குறிப்பாக பிராந்திய நிறுவனங்களுடனான கடல் கண்காணிப்பு மற்றும் இந்தியப் பெருங்கடலில், இந்தியாவுடன் கூட்டாண்மை உட்பட - மேம்படுத்தவும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில், நாங்கள் ஒருவரையொருவர் நிலைநிறுத்தி ஸ்திரப்படுத்துவதை ஆதரிப்போம். மற்றும் விதிகள் அடிப்படையிலான உலகளாவிய ஒழுங்குமுறைக்கு ஆதரவாக மேலும் கூட்டு கடல்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எங்கள் பாதுகாப்பு வசதிகளை ஆழமாக்குவதற்கும், சிறந்த பரஸ்பர அணுகலை எளிதாக்குவதற்கும் நாங்கள் முயற்சிகளை ஆராய்வோம். இது எங்கள் இடையே நிலைநிறுத்தப்பட்டுள்ள பரஸ்பர தளவாட ஆதரவு ஏற்பாடுகளை நீண்ட காலத்துக்கு மேம்படுத்தும்." -என்றும் கூறப்பட்டது.

பிரெஞ்சின் இந்தோ - பசுபிக் மூலோபாயத்தை ஆஸ்திரேலியா வரவேற்றது.

ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை பசுபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களின் நாடுகள். அண்டை நாடுகளாக, பிரெஞ்சு பிரதேசங்கள் உட்பட பிராந்தியத்தில் ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றைப் பகிர்ந்து கொள்கிறோம். என்றும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பட்டினியால் அழுகின்றன என் பிள்ளைகள்; அழுது புலம்பிய தந்தைக்கு மக்கள் உதவி!

உணவு மற்றும் பால் இன்றி தனது பிள்ளைகள் பசியில் அழுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை எனக் கூறி 37 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வீதியில் பதாகையை வைத்துக்கொண்டு அழுது புலம்பியுள்ளார்.

இந்த சம்பவம் ஹெம்மாத்தகம நகரில் நடந்துள்ளது. நகரில் பிரதான வீதியில் நபர் ஒருவர் அழுதுக்கொண்டிருப்பதைப் பார்த்த பொலிஸார், வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் அவருக்கு உணவு உள்ளிட்ட தேவையான பொருள்களை அன்பளிப்பு செய்துள்ளனர்.

ஹெம்மாத்தகம சியம்பலாவ என்ற பிரதேசத்தில் வசித்து வரும் பீ.எம்.சுசந்த குமார என்ற இந்த நபர், கட்டட நிர்மாண தொழிலாளி எனவும் அவருக்கு 7 மற்றும் 13 வயதான ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சீமெந்து விலைகள் அதிகரித்துள்ளமையால், தனது தொழில் நின்று போயுள்ளதாக சுசந்த குமார தெரிவித்துள்ளார்.

7 வயதான மகன் பால் கேட்டு அழுகிறான். பிள்ளைகளுக்கு பால் மட்டுமல்ல, குடும்பத்தில் இருப்பவர்களுக்கு மூன்று வேளை சாப்பிடவும் எதுவுமில்லை. தொழில் இல்லாத என்னால், பிள்ளைகளுக்கு உணவைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

என்னைப் போல் பல பெற்றோர் செய்வதறியாத பரிதாப நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் படும் கஷ்டத்தை விவரிக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

நகரின் பிரதான வீதியில் அதிகளவில் வாகனங்கள் செல்வதால், வீதியின் நடுவில் அமர்ந்து அழுது கொண்டிருந்த இந்த நபருக்கு விபத்து ஏதேனும் ஏற்படும் என்று பொலிஸார் தலையிட்டு அவரை வீதியோரத்தில் அமருமாறு கூறியுள்ளனர்.

அவரது கஷ்டத்தை உணர்ந்த பொலிஸார் மாத்திரமல்லது மக்களும் இன மத பேதமின்றி இந்த இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு தேவையான உணவுப் பொருள்கள், பானங்கள், மரக்கறிகள் மற்றும் தேவையான பணத்தையும் வழங்கியுள்ளனர்.

உதவிகளை பெற்றுக்கொண்ட அவர், அனைவருக்கும் நன்றி கூறியதுடன் ஹெம்மாத்தகம நகரில் தனக்கு உதவிய இந்த மக்கள் மனிதநேயத்தை அறிந்தவர்கள் எனக்கூறியுள்ளார்.

# இலங்கையில் 7,000 பேர் உயிருக்குப் போராட்டம்!

## இருதய சத்திர சிகிச்சை பாதிப்பு

கொழும்பு, ஜூலை 05

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அனைத்துத் துறைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நாட்டில் சுமார் 7 ஆயிரம் பேர் இருதய சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றனர் என்று அரச தரப்பு சார்பில் நாடாளுமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் 4 ஆயிரம் பேர், கண்டியில் 2 ஆயிரம் பேர், யாழ்ப்பாணத்தில் 1000 பேர் என நாட்டில் சுமார் 7 ஆயிரம் பேர் இருதய சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றனர். இவர்களுக்கான சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மருத்துவர்கள் உட்பட மருந்து, உபகரணங்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுயமான ஊரடங்குச் சட்டம் அமுலில்!

நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுயமாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (திங்கட்கிழமை) உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றமைபோல் கண்ணுக்கு தெரியவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் –

மக்கள் கடுமையான அடக்குமுறையால் அவதிப்படுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

குறைந்தபட்சம் அந்த மக்களுக்கு நிவாரணம் இல்லை. எதிர்க்கட்சியில் இருந்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை.

துரதிஷ்டவசமாக இந்த ஆட்சியில் சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை இல்லை. நான் ரணில் விக்ரமசிங்கவின் பங்கு பற்றி பேசவில்லை. இவர் தேர்தலில் தோல்வியடைந்து தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த தனி நபர். அப்படிப்பட்டவர் பிரதமரானால் சர்வதேச அளவில் நம்பிக்கை உருவாகும் என்று நான் நினைக்கவில்லை.

தயவு செய்து இப்போதும் இதை பெரிதாக்க இடமளிக்க வேண்டாம், எமது கட்சிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடி, சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவி, நாட்டின் நம்பிக்கையையும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் பெறுவதற்கான வேலைத்திட்டத்துக்குச் செல்ல வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லங்காபுர பிரதேச செயலக நிர்வாக அதிகாரி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை!

கொழும்பு, ஜூலை 05

பொலன்னறுவை – லங்காபுர பிரதேச செயலகத்தின் நிர்வாக அதிகாரி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை அவரது வீட்டுக்கு வந்த அடையாளந் தெரியாத ஒருவரால் அவர் படுகொலை செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தின்போது அவரது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளும் உடனிருந்தனர் என்றும் எனினும் அவர்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நானுஓயா கிரிமிட்டியில் நல்லடக்கம் செய்ய இடம் வழங்கக் கோரி அமைதிப் போராட்டம்

நானுஓயா கிரிமிட்டியில் நல்லடக்கம் செய்ய இடம் கோரி மக்கள் அமைதிப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுத்தனர்.

நானுஓயா கிரிமிட்டிய பிரதேசத்தில் சுமார் 8 வருடங்களுக்கு மேலாக மரணிப்போரின் உடல்களை அடக்கம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தனி நபர் ஒருவர் அபகரித்து அந்த இடத்தில் புதிய வீட்டை அமைத்து, மின்சாரம் பெற்றுள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நுவரெலியா – தலவாக்கலை பிரதான வீதியில் கிரிமிட்டி பிரதான நகரில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உடல்களை அடக்கம் செய்ய இந்த இடத்தை வழங்கக்கோரியும், பொலிஸார் முறையான விசாரணை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மே 11 வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி கோட்டா மீறியுள்ளார்!

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 05

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள விதிகளை மீள அமுல்படுத்துவதாக பொது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நாட்டின் தலைவர்கள் மீறியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை மீளக் கொண்டுவந்து, கொடுங்கோல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என பொதுமக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

மே 11ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, 19 ஆவதை அமுல்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக உறுதியளித்தார் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் 22 ஆவது அரசமைப்பு திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மேலும் அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மகாசங்கத்தினரை தவறாக வழிநடத்தியுள்ளார் என்றும் குற்றம் சாட்டினார்.

19 ஆவது திருத்தத்தில் உள்ள விதிகளுக்கு மாறாக 22 ஆவது திருத்தம், பிரதமரை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரத்தையும் அமைச்சு பதவியை பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தையும் கொடுத்துள்ளது என ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார்.

இது ஜனாதிபதியை தொடர்ந்து ஆட்சியில் நீடிப்பதற்கு மேற்கொண்ட சூழ்ச்சி என்றும் இதன் விளைவாகவே அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு மகாசங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

# எனது அப்பா நலமுடனுள்ளார்! நாமல் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நலமுடன் இருக்கிறார் என அவரது புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில், முன்னாள் பிரதமர் தொடர்பான தவறான தகவலை பரப்பாமல் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# வைத்தியசாலைகளின் பணிகள் முற்றாகத் தடைப்படும் அபாயம்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக கிராமிய வைத்தியசாலைகளின் பணிகள் முற்றாக தடைபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உள்நோயாளிகளை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்க அந்த வைத்தியசாலைகளின் அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளதுடன், வெளிநோயாளர் சிகிச்சை நிலையங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வைத்தியசாலை ஊழியர்கள் பணிக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாகவே வைத்தியசாலையின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

எனினும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளைப் பிரதான வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதன் மூலம் அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்கப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, வெலிகம பிராந்திய வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கியுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையை கடந்த 2 ஆம் திகதி முதல் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள், வீடுகள் மற்றும் ஏனைய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

## ரயில் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற ரயில் செட்டிகுளம் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த வேளை விபத்தில் சிக்கி படுகாயமடைந்த குடும்பஸ்தர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இந்த சம்பவத்தில் காந்திநகர் பகுதியைச் சேர்ந்த ருக்சன் (வயது 33) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார்.

அவர் சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (சிறி ரெலோ) செட்டிகுளம் பிரதேச இணைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்து காரணமாக சில மணி நேர தாமதத்தின் பின்னரே ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

விபத்து தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்க சேவையாளர்கள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானம் தேவை!

## நாலக கொடஹேவா வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் பேச்சு இறுதிப்படுத்தப்படாது உள்ள நிலையில் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் முறையான திட்டத்தை இதுவரை முன்வைக்கவில்லை.

அரச சேவையில் தேவைக்கு மேலதிகமாக சேவையாளர்கள் உள்ளமை அரச செலவை நாளுக்கு நாள் தீவிரப்படுத்துகிறது.

அரச சேவையாளர்கள் தொடர்பாக அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

'நடைமுறை நெருக்கடிகளுக்கு தீர்வு என்ன' என்ற தொனிப்பொருளில் களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு குறுகியகாலத் தீர்வு காண வேண்டுமாயின் அரசமுறை கடன்களைப் பெற வேண்டும் என்பதை அனைவரும் அறிவார்கள்,சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் அரசாங்கம் அதனையே எதிர்பார்க்கிறது.

அரசமுறை கடன்களை மீள் செலுத்தும் திட்டத்தை முன்வைக்காவிடின் எந்த நிறுவனமும் கடன் வழங்காது. ஆகவே நீண்டகாலத் திட்டங்களை செயற்படுத்திய வகையிலான தீர்வு அவசியமாகும்.

அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வது, வெளிநாட்டு செலவுகளை மட்டுப்படுத்தல்,தேசிய வருமானத்தை அதிகரிப்பது, தேசிய செலவுகளை கட்டுப்படுத்தல் ஆகிய நான்கு பிரதான விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இருப்பினும் அரசாங்கம் சூழ்நிலையை சமாளிப்பதற்காக கருத்துரைக்கிறதே தவிர பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

வரலாற்று ரீதியிலான தவறுகளை திருத்திக் கொண்டு, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வைக் காண்பதற்கு உரிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றமும், மக்களும் அனுமதி வழங்காமலிருப்பது பிறிதொரு பிரச்சினையாக உள்ளது.

2021ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தின் இடைவெளி மொத்த தேசிய உற்பத்தியின் 12 சதவீதமாகக் காணப்பட்டமை பாரியதொரு பிரச்சினையாகும். இருக்கும் கடனைச் செலுத்த முடியாத நிலையில் வரவு – செலவுத் திட்டத்தை முழுமைப்படுத்த நாணயம் அச்சிட்டமை நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியது. தேசிய செலவு கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அரச செலவு கட்டுப்பாடு தொடர்பிலான கொள்கை செலவைக் குறைப்பதைக் காட்டிலும் செலவை கட்டுப்படுத்தல் மற்றும் மோசடியை இல்லாதொழிப்பதை இலக்காக கொண்டதாக காணப்பட வேண்டும்.

2021 ஆம் ஆண்டு அரச செலவு 3,521 பில்லியனாகும். இதில் 2,748 பில்லியன் அதிகரிக்கும் செலவுகள் என மதிப்பிடப்பட்டுள்ளன.அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக மாத்திரம் 1,115 பில்லியன்நிதிசெலவிடப்பட்டுள்ளது.பெற்றுக்கொள்ளப்பட்ட அரசமுறை கடன்களுக்கு 1,048 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு சொந்தமான 420 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 52 செயற்திட்டங்கள் மாத்திரமே திறைசேரிக்கு பயனுடையதாக உள்ளன. மறுபுறம் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் பொருளாதார நெருக்கடிக்கு பிறிதொரு காரணியாக உள்ளன.

இலங்கை மின்சார சபை 214 பில்லியன் நட்டத்தையும்,இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 82.2 பில்லியன் நட்டத்தையும்,ஸ்ரீ லங்கன் விமான சேவை 170.7 பில்லியன் நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளன. திறைச்சேரியின் வருடாந்த மானியத்தால் பெரும்பாலான நிறுவனங்களின் நட்டம் முகாமைத்துவம் செய்யப்படுகிறது.



தற்போது 14 லட்சத்து 2 ஆயிரம் அரச சேவையாளர்களும்,அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் 7 லட்சத்து 92 ஆயிரம் சேவையாளர்களும், பிரதேச மற்றும் உள்ளூராட்சிமன்றங்களில் 3 லட்சத்து 90 ஆயிரம் சேவையாளர்களும்,அரச செயற்திட்டங்களில் 2 லட்சத்து 20 ஆயிரம் சேவையாளர்களும் உள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் மொத்த செலவு 1115 பில்லியனாக காணப்படும் பட்சத்தில் அரச வருமானம் 80 சதவீதமாக வரையறுக்கப்பட்டுள்ளமை முரண்பாடானதாகும்.

தேவைக்கதிகமாகவே அரச சேவையாளர்கள் உள்ளார்கள். அரச சேவையாளர்கள் தொடர்பில் அரசாங்கம் எதிர்வரும் காலங்களில் கொள்கை ரீதியில் நடைமுறைக்கு சாத்தியமாகும் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும்.சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. – என்றார்.

# பிரதமர் ரணில் தலைமையிலான அரசு மீது அதிருப்தியில் பொதுஜன பெரமுனவினர்!

## அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறுகிறார்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள். அரசியல் ஸ்திரமற்ற தன்மை தற்போதைய நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கும்,ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான ஆளும் தரப்பு குழு கூட்டமும் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

சமூக கட்டமைப்பில் தீவிரமடைந்துள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதைத் தவிர்த்து மாற்று திட்டங்கள் ஏதும் கிடையாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள நிலையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை விதித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தாததால் நடுத்தர மக்கள் மேலும் பாதிக்கப் படுவார்கள். நாணய நிதியத்தின் சாதக காரணிகளை மாத்திரம் முன்னிலைப்படுத்தும் தரப்பினர் பாதக காரணிகளை பகிரங்கப்படுத்தாமல் இருப்பது பிரதான குறைபாடாகக் காணப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினோம். தற்போதைய அரசாங்கம் – லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலானதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பல்வேறு காரணிகளால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஆணையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு காணப்படுகிறது. தவறுகளை இடம்பெற்ற இடத்தில் இருந்து தான் அதற்குத் தீர்வு காண வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். அரசியல் ரீதியிலான தவறுகள் தற்போது திருத்திக்கொள்ளாவிடின் அது எதிர்கால அரசியல் இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். – என்றார்.

# சமுர்த்தி முகாமையாளர்களும் இனி வீட்டிலிருந்தே கடமை!

## அந்தச் சங்கம் அறிவிப்பு

நேற்று (திங்கட்கிழமை) முதல் வீட்டிலிருந்தே பணியில் ஈடுபடவுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட. செயலருக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு –

எரிபொருள் நெருக்கடி காரணமாக பிரதேச செயலகங்களால் அத்தியாவசிய சேவையென முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் பெரும்பாலான பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை பெற்றோல் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மே மாதத்திலிருந்து மாவட்டத்திலுள்ள சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 424 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் சமுர்த்தி வங்கிகளால் நாளாந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இந்தச் சமூகநலக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் எமது சேவையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருளின்மையால் அலுவலகங்களுக்கு வருகை தந்து தமது கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதைத் தங்களுக்கு மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

எனவே, எமது அலுவலர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கும்வரை 04.07.2022 ஆம் திகதி தொடக்கம் எமது நாளாந்த சமுர்த்தி வங்கி வேலைகளிலிருந்தும், உலக வங்கி நிதி ஒதுக்கீட்டின் கீழ் தற்போது பொருளாதார நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கும் நலனுதவிக் கொடுப்பனவிலிருந்தும், விலகியிருப்பதுடன் தற்போதைய அரச சுற்று நிரூபத்துக்கு அமைவாக வீடுகளிலிருந்தவாறு எமது கடமைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்பதைத் தயவுடன் தங்களுக்கு அறியத்தருகின்றோம். – என்றுள்ளது

# எரிபொருள் இறக்குமதிக்கு 11 கோடி டொலர் முற்பணம்

## அமைச்சர் காஞ்சன தகவல்



நாட்டில் தற்போது சுமார் 4 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் , 5 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தொகை கையிருப்பில் உள்ளன.

எதிர்வரும் வாரங்களில் இவற்றை இறக்குமதி செய்வதற்காக வெவ்வேறு நிறுவனங்களுக்கு சுமார் 11 கோடியே 10 லட்சம் டொலர் முற்பணத்தை செலுத்த வேண்டியுள்ளதாக வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மேற்படி முற்பணத் தொகைகள் செலுத்தப்பட்டால் 8 – 9 திகதிகளுக்கிடையில் கொரல் என்ற நிறுவனத்தினதும், 11 – 14 ஆம் திகதிகளுக்கிடையில் விட்டோல் என்ற நிறுவனத்தினதும் டீசல் கப்பல்கள் வருகை தரவுள்ளன.

22 – 23 ஆம் திகதிகளுக்கிடையில் ஐ.ஓ.சி நிறுவனத்தின் பெற்றோல் கப்பலும், 15 ஆம் திகதி கொரல் நிறுவனத்தின் மசகு எண்ணெய்க் கப்பலும், 10 அல்லது 11 ஆம் திகதிகளில் உராய்வு எண்ணெய் கப்பலும் நாட்டை வந்தடையும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

வலுசக்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தற்போது 5 ஆயிரத்து 274 மெற்றிக் தொன் டீசல் கொலன்னாவ முனையத்தில் கையிருப்பில் உள்ளது. கடந்த 30 ஆம் திகதி ஐ.ஓ.சி. நிறுவனத்திடமிருந்து 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக 1 கோடியே 10 லட்சம் டொலர் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய திருகோணமலை முனையத்திலிருந்து கொலன்னாவைக்கு டீசல் வழங்கப்படும். அதற்கமைய ஒட்டுமொத்தமாக 12 ஆயிரத்து 774 மெற்றிக் தொன் டீசல் இருப்பில் உள்ளது.

மேலும் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 1,414 மெற்றிக் தொன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் 2 ஆயிரத்து 647 மெற்றிக் தொன், சுப்பர் டீசல் 233 மெற்றிக் தொன், விமான எரிபொருள் 500 மெற்றிக் தொன், உராய்வு எண்ணெய் 27 ஆயிரம் மெற்றிக் தொன் என்பன கையிருப்பில் உள்ளன. ஐ.ஓ.சி. நிறுவனத்திடமிருந்து 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட முற்பணம் தவிர மேலும் பல விநியோகத்தர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதோடு, சில நிறுவனங்களிடம் கப்பல்களுக்கு முற்பதிவும் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய விட்டோல் என்ற நிறுவனத்திற்கு 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 30 ஆம் திகதி 2 கோடியே 80 லட்சம் டொலர் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்துக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி மேலும் 4 கோடியே 90 லட்சம் டொலர் செலுத்த வேண்டியுள்ளது. 8 ஆம் திகதி குறித்த தொகையை வைப்பிலிட்டதன் பின்னர் 11 மற்றும் 14 ஆம் திகதிகளுக்கிடையில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கப்பல் நாட்டை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளமைக்கு மேலதிகமாக மேலும் 4 கப்பல்களை வரவழைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக முதலாவது பெற்றோல் கப்பலுக்கு ஆரம்ப கட்டணமாக 19.95 மில்லியன் டொலர் கடந்த 30 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இதற்குரிய கப்பல் எதிர்வரும் 22 அல்லது 23 ஆம் திகதிகளில் வருகை தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கப்பலுக்காக எஞ்சிய ஒரு கோடியே 9 லட்சத்து 95 ஆயிரம் டொலரையும் 8 ஆம் திகதி செலுத்த வேண்டியுள்ளது. இந்த மேலதிக கொடுப்பனவு இந்திய கடன் திட்டத்தில் மீதமுள்ள 2 கோடி டொலர் ஊடாக வழங்கப்படும்.

அடுத்தது கொரல் என்ற நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ள முற்பதிவிற்கமைய 5 ஆம் திகதி டீசல் கப்பலொன்று இந்தியாவிலிருந்து புறப்பட்டுள்ளது. இந்த கப்பல் 8 அல்லது 9 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கப்பல் ஊடாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கொண்டுவரப்படும். இதற்கான 6 கோடியே 60 லட்சம் டொலரை கப்பல் வருகை தந்ததன் பின்னர் செலுத்த வேண்டும்.

விட்டோல் நிறுவனத்துக்கு மீண்டுமொரு டீசல் கப்பலுக்கான முற்பணமும் செலுத்தப்பட்டுள்ளது. 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் குறித்த கப்பல் எதிர்வரும் 11 – 14 ஆம் திகதிக்கு இடையில் நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு தம்மால் மேலும் இரு டீசல் கப்பல்களை இலங்கைக்கு அனுப்ப முடியும் என்று சனியன்று ஐ.ஓ.சி. நிறுவனம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்துள்ளது. அவற்றில் ஒரு கப்பல் 15 – 17 ஆம் திகதிகளுக்குள் நாட்டுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு 50 சதவீத முற்பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் ஏனைய கப்பல்களுக்கும் முற்பணம் செலுத்துவதற்கு வேண்டியிருப்பதால் இந்த கப்பலுக்கான 30 சதவீத முற்பணத்தை புதனன்று செலுவதற்கு வாய்ப்பளிக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

இது தவிர, மலேசிய அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 10 – 11 திகதிகளுக்கிடையில் மசேலிய நிறுவனமொன்றிடமிருந்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் கப்பலொன்று வரக் கூடும்.

மேலும் கொரல் எனர்ஜி நிறுவனத்துக்கு உராய்வு எண்ணெய்க்காக முற்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு லட்சத்து 35 ஆயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய் கப்பல் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே நிறுவனத்திடம் ஆகஸ்ட் 11 ஆம் திகதி நாட்டை வந்தடையும் வகையில் பிரிதொரு உராய்வு எண்ணெய் கப்பலும் முற்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட அனைத்து கப்பல்களுக்கும் 11 கோடியே 10 லட்சம் டொலர் முற்பணத்தை செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய இவ்வாரத்துக்குள் ஒட்மொத்தமாக 13 கோடியே 62 லட்சம் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. மத்திய வங்கி மற்றும் திறைசேரி என்பவற்றுடன் கலந்தாலோசித்து இவற்றை செலுத்துவதற்கான நடவடிக்கையை எவ்வாறேனும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. – என்றார்.

# கோட்டாவும் ரணிலும் பதவிவிலகி வீடுகளுக்கு சென்றால் மட்டுமே நாடு மீண்டும் மீண்டெழும்!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு





பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி தவிக்கும் இந்நாடு மீண்டெழ வேண்டுமெனில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகி வீடு செல்ல வேண்டும். – என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் ஹற்றன் கிருஸ்ணபவான் மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இலங்கையின் பணவீக்கம் வரலாறு காணாத வகையில் உச்சம் தொட்டு – 56 சதவீதமாக பதிவாகியுள்ளது. முறையற்ற விதத்திலான பண அச்சீடு உட்படமொட்டு கட்சி அரசின் பிற்போக்குத்தனமான ஆட்சி கொள்கையே இதற்குப் பிரதான காரணம். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது.

ஒருவரின் வங்கி வைப்பில் 10 லட்சம் ரூபா இருந்திருந்தால் தற்போது அதன் உண்மையான பெறுமதி 5 லட்சமாகவே இருக்கும். அந்தளவுக்கு பொருள்களின் விலைகளும் எகிறியுள்ளன. – எனவும் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீங்க வேண்டுமெனில் ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகுவதே சிறந்த தேர்வாக இருக்கும். தற்போதைய ஆட்சியாளர்களை சர்வதேச சமூகம்கூட ஏற்கவில்லை.

கட்டாரிலுள்ள முக்கிய நிறுவனமொன்றை தடைப்பட்டியலில் கோட்டா அரசு இணைத்தது. இதன்விளைவாகவே கட்டாரில் இருந்து எரிபொருளைப் பெறுவதில் அரசு திண்டாடுகின்றது. முறையற்ற – தெளிவற்ற – கொள்கையற்ற ஆட்சிபோக்கே இதற்குக் காரணம்.

சஜித் பிரேமதாஸவுக்கு சர்வதேச சமூகத்துடன் சிறந்த தொடர்பு உள்ளது. அரபுலக நாடுகளுடனும் நட்புறவைப் பேணிவருகின்றமையால். அவரால் தான் நாட்டை மீட்க வேண்டும். – என இராதாகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டார்.

# மசாலா பொருள்களின் விலை மீண்டும் எகிறல்!

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சந்தையில் மசாலாப் பொருள்களின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

கறுவா, மிளகு மற்றும் கிராம்பு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, கறுவா 5 ஆயிரம் ரூபாவாகவும், மிளகு 1, 300 ரூபாவாகவும், குருதிநெல்லி 2 ஆயிரத்து 400 ரூபாவாகவும் ஏற்றுமதி மட்டம் அதிகரித்துள்ளது.

இதேவேளை,நுகர்வோர் விவகார ஆணையகத்தின் நுகர்வோர் விவகார கவுன்ஸில், அரிசி, சிவப்பு பருப்பு, பருப்பு மற்றும் சீனி உள்ளிட்ட பொருள்களுக்கு அதிக பட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்ய தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நஸீர் அஹமட் தலைமையில் ஹஜ் குழு ஜித்தா பயணம்!

சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையிலான ஹஜ் குழுவினர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக ஜித்தா புறப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில், நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பழீல், முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் சாஹிப் அன்ஸார் மற்றும் ஹஜ் குழு தலைவர் அஹ்காம் உவைஸ் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

மூன்று வருடங்களின் பின்னர், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கை முஸ்லிம்களுக்கு புனித ஹஜ் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக மற்றும் அரசாங்கத்துக்கும் அமைச்சர் நஸீர் அஹமட் நன்றி தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களின் பின்னர், உலக முஸ்லிம்கள் பரந்தளவில் ஹஜ் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திய சவுதி அரேபிய அரசாங்கத்துக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

# 22 ஐ நிறைவேற்ற ஒத்துழைக்காவிட்டால் நாடு மேலும் அராஜக நிலைக்கு செல்லும்!

## அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரிக்கை



நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவிடம் ஆட்சி அதிகாரம் இல்லை. இதேவேளை 22 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு 150 வாக்குகள் தேவைப்படுகின்றன. இவ்விரு விடயங்களுக்குமிடையில் காணப்படும் சிக்கல் நிலைமை தீர்ப்பதற்காகவே பிரதமரை பதவி நீக்கும் அதிகாரம் இடைக்கால ஏற்பாடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

22 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைக்காவிட்டால் நாடு மேலும் மேலும் அராஜக நிலைமைக்கே செல்லும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த திருத்தம் எந்தவொரு கட்சியையோ அல்லது தனிநபரையோ பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்டதல்ல என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மக்கள் பிரதிநிதிகள் எவரும் எதிர்க்க முடியாத வகையிலேயே 22 ஆவது அரசமைப்பு திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது. மாறாக, எவரேனும் அதனை எதிர்பார்ப்பார்களாயின் அது மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் துரோகச் செயலாகும். சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பல தரப்பினருடன் நாம் பேச்சுகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

இதன் போது அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரதான நிபந்தனை யாதெனில் ,'எம்மிடமிருந்து உதவி ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக சட்டத்தின் ஆட்சியை ஸ்திரப்படுத்திக் காட்ட வேண்டும்.' – என்பதாகும். அதனை ஸ்திரப்படுத்தும் வரை எம்மால் உதவிகளை வழங்குவது சிக்கலுக்குரியதாகும் என்று தெரிவித்துள்ளனர்.

பிரதமரை பதவி நீக்குதல், அமைச்சர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல் தொடர்பில் 22 ஆவது திருத்தத்தில் இடைக்கால ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அமைச்சர்கள் நியமனம் மற்றும் நீக்குதல் விவகாரத்தில் பிரதமரின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த விடயம், தற்போதைய நாடாளுமன்ற காலத்திற்கமைய பிரதமரின் நிலைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்க முடியும் என்று திருத்தப்பட்டுள்ளது.

இதே போன்று பிரதமரை பதவி நீக்குவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்திற்கமைய , நாடாளுமன்றத்தில் பிரதமருக்குப் பெரும்பான்மை இல்லை என்று கருதும் பட்சத்தில் ஜனாதிபதியால் அவரைப் பதவி நீக்க முடியும் என்ற திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது இடைக்கால ஏற்பாடாகும். அதற்கமைய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரு வாதங்களை முன்வைத்துள்ளது.

அவற்றில் ஒன்று நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை மாத்திரமே கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமையாகும். மற்றையது பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்பட்டமையின் காரணமாகவே அவரால் மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்கி, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது என்பதாகும். நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவிடம் பெரும்பான்மைப் பலம் காணப்படுகின்றமையாலும் , 150 வாக்குகள் இன்றி 22 ஐ நிறைவேற்ற முடியாது என்பதாலும் இவ்வாறான இடைக்கால ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்போதிருப்பது வழமைக்கு மாறான ஆட்சியாகும். அதாவது பெரும்பான்மைப் பலம் கொண்ட கட்சியிடம் ஆட்சி அதிகாரம் இல்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகவே மேற்கூறப்பட்ட திருத்தங்கள் 22 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பிரச்சினையை இதனை விட சுமூகமாக தீர்க்கக் கூடிய யோசனை எவரிடமேனும் காணப்படுமாயின் அதனை ஏற்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். சில வரையறைகளுக்கும் அப்பால் சென்று இதனை விமர்சிக்கும் அரசியல்வாதிகளிடம் நான் ஒரு விடயத்தினை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு 150 வாக்குகளை மாத்திரம் பெற்று, சர்வசன வாக்கெடுப்பிற்கு செல்லாமல் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய திருத்தத்தை எவரேனும் முன்வைப்பார்களாயின் அவர்களிடம் நீதித்துறை அமைச்சைக் கையளிப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்காவிடின் நாடு மேலும் மேலும் அராஜக நிலைமையை நோக்கியே செல்லும். எனவே, மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு இதுவா என்பதை சிந்திக்க வேண்டும்.

19 இல் அரசமைப்பு சபையின் அங்கத்தவர்களாக பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் காணப்படுவர். ஜனாதிபதியும் அதில் ஒரு பிரதிநிதியாக இருப்பார். எஞ்சிய மூவரை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் பிரதமர் கலந்தாலோசித்து தெரிவு செய்ய முடியும் என்று காணப்பட்டது. இதனை திருத்தி இந்த அதிகாரம் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது. தேசிய அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது.

ஏதேனுமொரு அமைச்சின் அமைச்சர் பதவி விலகினாலும், அதன் செயலாளர் அந்த பதவியைத் தொடரும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளுடன் சபையின் ஊழல் ஒழிப்பு பிரகடனத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும் சட்டத்தை அமைப்பதற்கான திருத்தம் 22 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தமானது எந்தவொரு கட்சியையோ அல்லது தனிநபரையோ பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்டதல்ல. எனவே மக்கள் பிரதிநிதிகள் அனைவரதும் ஒத்துழைப்புடன் இதனை நிறைவேற்ற முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

## பொருளாதார நெருக்கடி நாட்டில் உச்சம் தங்க நகைகளை விற்கக் குவியும் மக்கள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக தங்க நகைகளை விற்பனை செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்கு செல்லும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவே மக்கள் தங்களிடம் உள்ள தங்க நகைகளை விற்பனை செய்கின்றனர் என அந்த சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும், புதிதாக தங்கத்தைக் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் 5 முதல் 10 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக தங்க விற்பனையில் கடும் சரிவனை எதிர்நோக்கியுள்ளதாகவும், கட்டாய தேவைகளுக்காக மாத்திரமே தங்க நகை கொள்வனவில் மக்கள் ஈடுபடுகின்றனர் எனவும் அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## தபால் ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டன

*தபால் ஊழியர்கள் முன்னெடுத்திருந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.*

*ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனு பெல்பிட்டவுடன் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, கடந்த ஜூன் 28 ஆம்திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.*

## யாழில் 291 லீற்றர் டீசலுடன் கடை உரிமையாளர் கைது!

யாழ்ப்பாணம், அளவெட்டிப் பகுதியில் டீசலைப் பதுக்கி வைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவரைத் தெல்லிப்பழைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் டீசல் பதுக்கி விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது 291லீற்றர் டீசல் மற்றும் விற்பனைக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

டீசலைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 42 வயதுடைய கடை உரிமையாளரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

## மட்டு ஐ.ஓ.சி. நிலையத்தின் முன்மாதிரியான செயற்பாடு!





மட்டக்களப்பு நகரிலுள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கடு மையான நோயாளர்களுக்கும் துரிதகதியில் பெற்றோல் வழங்கப்படுவதாக நேற்று(திங்கட்கிழமை) எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் எம்.செல்வராசா தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் எரிபொருளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றபோதிலும் மட்டக்களப்பு லங்கா ஐ.ஓ.சீ. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எவ்வித தடைகளுமின்றி எரிபொருள் விநியோகம் சீரான முறையில் நடைபெற்று வருகின்றது.

இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் எரிபொருள் நிரப்பு நிலைய அதிபர் எம்.செல்வராசாவின் வழிநடாத்தலில் மிகவும் நேர்த்தியாக திங்கட்கிழமை காலை முதல் பெற்றோல் விநியோகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-55

தன்னிறைவுக்கான பொருளாதாரத் திட்டங்களையும் அரசியல் செயல்முறைகளையும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் முன்னெடுக்க இலங்கை –இந்திய அரசுகளுக்கு அழுத்தம் தர வேண்டும், அதற்காக சிங்கள மக்களில் ஆதரவு தரும் பகுதிகளோடும் மற்றும் மலையக, முஸ்லிம் மக்களடனும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துவோர் இன்னொருவிடயத்தையும் கூறுகின்றனர். எனது பதிவுகள் யதார்த்த நிலைகளில் இருந்து பதியப்பட்டாலும், ஆணித்தரமாக இவற்றை முன்னெடுக்காத பகுதிகளைச் சாடி, அவர்களின் பிழையான அரசியல் வழிநடத்தலால் தான் தமிழ் மக்கள் இன்றைய நிலையில் இருக்கிறார்கள் என நான் சொல்வதில்லை என்று கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

எனது கருத்துக்களை தமிழ் மக்க



ளுக்கு நன்மை தரக்கூடியவை என்ற நிலையிலிருந்துநான்பதிவிடுகின்றேனே தவிர, அரசியல் நடத்தும் எந்த தலைவரையோ அல்லது கட்சியையோ ஓரம் கட்டி அவருடைய விருப்பு வெறுப்புக்கோ, சேறாடுவதோ எனது எண்ணம் அல்ல.

இது, இயங்குகின்ற மற்றும் கடிதத் தலைப்புகள் ஊடாடாடுகின்ற புலம்பெயர் அமைப்புகளையும் உள்ளடக்கிய விடயம்தான்.

இறுதியில் இவையெல்லாம் குறித்து தமிழர்களின் தீர்மானங்களை நிலைமையை முடிவு செய்யும்.

தமிழ் மக்களுக்கு ஆயுதங்களோடு, பலமான அர்ப்பணிப்பில் இருந்த புலிகளின் முட்டுக்கட்டையை நீக்கி,சிங்கள குடியேற்றங்களை வடபகுதியில் முன்னெடுத்து, தமிழ் – முஸ்லிம் பெரும்பான்மையான பகுதிகள் இங்கு இல்லை என்ற நிலையை உருவாக்குவதுதான் போரை நடத்தி, விடுதலைப் புலிகளை அழிக்கும் சிங்களப் பேரினவாதிகளின் திட்டத்தின் பின்னால் புதைந்து கிடக்கும் பிரதான நோக்கம்.

அது நடந்ததும், எந்த மாகாணத்திலும் விகிதாசாரப்படி சிங்கள மக்கள் சரிக்குச் சரியாக இருந்தால், எல்லாத் தேர்தல்களிலும் – முக்கியமாக நாடாளுமன்றத்திற்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து முற்றும் முழுதாக தமிழ் பிரதிகள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்ற நிலைமை உருவாகும்.

வெல்ல முடியும் என்று தமிழர் போட்டியிட்டாரானால் அவர் சிங்கள மக்களின் ஆதரவைத் தேட வேண்டிய நிர்பந்தத்தில் இருப்பார் அல்லது அரசு அனுசரணையாளராக அவர்களால் நியமிக்கப்பட்டவராக இருப்பார். இவற்றைத்தான் வவுனியா மாவட்டத் தேர்தல்களில் முக்கியமாக நெடுங்கேணிப் பகுதிகளின் நடப்புகள் தெளிவாக உணர்த்துகின்றன.

எதிர்பார்க்கப்பட்டபடியே போரின் வெற்றியில் விடுதலைப் புலிகள் முன்னெடுத்த போராட்டம் முறியடிக்கப்பட்டது. அந்தப் பின்புலத்தில் முல்லைத்தீவுப் பகுதிகள் ஊடாக குடியேற்றங்களும் பௌத்தமயமாக்கலும் முன்னேறுகின்றன.

இவைநடக்கின்றன எனகோமிட்டமை தவிர வேறு ஒன்றும் இங்கு எங்களால் செய்ய முடியவில்லை.

இத்தகைய முன்னேற்றங்களால் தமிழ்ப் பிரதேசங்களிலேயே அவர்கள் (தமிழர்கள்) பெரும்பான்மையை இழந்து விட்டால், அதற்குப் பிறகு ஒரு நாட்டுத் திட்டத்தின் கீழ்,தங்கள் சிங்கள மக்கள் அதிகாரத்தில் இருக்கும் கிராம சபைகளுக்கோ,உள்ளூராட்சி சபைகளுக்கோ அவற்றுக்குப் பொருளாதார ரீதியாக வளர்ச்சித் திட்டங்கள் கையளிக்கப்படும். அதுவே திக்கத்தில் நடக்கிறது. அங்கு அமைந்திருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி நிலையம், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஊடாக தென்பகுதியில் இருப்பவர்களின் – சிங்களவர்களின் – கைகளுக்கு நிர்வாக ரீதியாக மாற்றப்படுகின்றது.

அதேபோல எதிர்காலத்தில் வடபகுதி நிர்வாகத்தில் அவர்கள் கைகளில் இருக்கும் சிங்கள பிரதிநிதிகள் ஊடாக விடயங்கள் கையாளப்படும்.

ஸ்ரீலங்கா ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு, மேற்கத்திய நாடுகள் போலவும், முக்கியமாக பிரித்தானியாவின் வெஸ்ட்மினிஸ்டர் அடிப்படையில் ஜனநாயகம் இங்கு நடக்கின்றது என்று காட்ட முயல்வார்கள்.

அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், சட்டத்திற்கு அமைவாக பதியப்பட்ட எந்த அரசியல் கட்சியும் சர்வ சாதாரணமாக ஸ்ரீலங்காவில் இயங்கித் தேர்தல்களில் போட்டியிடலாம். எழுபதுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் பதியப்பட்டு பலவித இன, மத அரசியல் கோட்பாடுடன் இயங்குகிறார்கள். நாடாளுமன்றத்துக்கோ மற்ற இடைப்பட்ட நிர்வாக அமைப்புகளுக்கோ தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் என்ன விகிதங்களில் இருக்கின்றார்களோ அவற்றை ஒட்டியே



திக்கம் வடிசாலை

இருக்கும், அது ஜனநாயக மயமானது, அதில் குறை சொல்ல இடமில்லை எனக் காட்டவும் முடியும்.

தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் ஸ்ரீலங்காவில் இல்லை. கட்சிகளுக்கிடையே தேர்தல் காலங்களில் வன்முறைகளும், அசம்பாவிதங்களும் சாதாரணமாக நடந்தாலும் காலம் காலமாக நடத்தப்பட்ட தேர்தல்கள் பொதுவாகவே முறையாகவே நடந்தன, அவற்றையொட்டி குறை சொல்வதற்கு இல்லை என்று அழைப்பிராயமும் பரவலாக உண்டு. அதையும் காட்டுவார்கள்.

ஐ.நாவில் இலங்கை அங்கத்துவம் பெற்ற நாள்கொண்டு அது சுதந்திரம் பெற்றுக் கொண்ட கட்டமைப்பில் எப்படி இருந்ததோ அதே போன்றுதான் மற்றைய அங்கத்துவ நாடுகளால் அது கணிக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் முன்வைக்கும் பிரித்தானிய காலனித்துவத்துக்கு முன்னரான சரித்திரம் ஐ.நாவின் நடைமுறைத் தீர்மானங்களில் கணக்கெடுக்கப்படுவதில்லை. இதனால்தான் தமிழ் மக்கள் தங்களது இறையாண்மையை ஒட்டி வைக்கும் கோஷங்கள், கோரிக்கைகள் யாவும் எத்தனையோ மற்ற நாடுகளில் இருந்து சிறுபான்மை மக்கள் தரும் வழமையான புகார்கள் போல பார்க்கப்படுகின்றன.

இப்படியான அணுகுமுறைகளின் பலாபலன்கள்

சிங்கள மிதவாதிகள், தமிழ் மக்கள் (அவர்களின் எல்லா பரப்புகளும்), முஸ்லிம், மலையக மக்கள் யாவரும் சேர்ந்து அவ்வாறான கோரிக்கைகளை (காலனித்துவத்துக்கு முன்பிருந்த நிலையை ஒட்டிய கோரிக்கைகளை) அதிகாரத்தில் இருக்கும் சிங்களப் பேரினவாதக் கட்சியின் முன் வைத்தாலும், பெரும்பான்மையின் திட்டங்களுக்கு அமைய அவை ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை. முற்றும் முழுதான தங்களது பேரினவாத அதிகாரத்தை எந்த அளவிலும் பகிர்ந்து கொள்ள சிங்களப் பெரும்பான்மை முன்வருவதற்கு உடன்படாது.

மேலத்தேச ஜனநாயகங்களில் அமைந்துள்ள சிறப்பம்சம் எதுவென்றால், அவர்கள் தங்களுடன் வாழும் சிறுபான்மைகளின் உரிமைகளையும் கணக்கெடுத்து, நிர்வாக முறைகளை வடிவமைத்துக் கொள்வார்கள். ஆனால் ஸ்ரீலங்காவின் ஜனநாயகமோ இருக்கின்ற பிறந்தநாள் கேக்கை முழுவதும் எப்படியும் தாங்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் தனித்து புசிப்பது என்பதில்தான் அக்கறை காட்டுகிறது.

எழுபத்தைந்து வீதத்துக்கு மேல் சிங்கள மக்கள் இருக்கின்றமையினால் தாங்கள் நினைத்த விதத்தில் அந்த கேக்கை வெட்டி பகிர்வது தங்களது ஜனநாயக உரிமை என்று வெளிப்படையாகவே தெரிவித்து, நியாயம் சொல்லி, தேவைக்கேற்ப சில சமூகத்தவர்களையும் இணைத்து ஜனநாயகத்தின் பெரும்பான்மை ஜாலத்தைப் பயன்படுத்துகிறார்கள். விவரிக்கின்றார்கள்.

ஐ.நாவின் கட்டமைப்பில், சர்வதேச சட்டங்களின் வளர்ச்சிகளில், அதன் உறுப்புக்கள் இனப்பிரச்சினை சம்பந்தமான புத்திமதிகள் தந்தாலும், அதன் பாதுகாப்புச் சபையோ பொதுச் சபையோ ஸ்ரீலங்கா அத்துமீறி அட்டூழியமாக நடக்கின்றது எனக் கணித்து ஏற்றுக் கொண்டாலேயே ஒழிய, கட்டமைப்பு ரீதியாக நிர்வாக முறைகளில் மாற்றங்கள் வருவதற்கான சாத்தியங்கள் அற்பம்.

அந்த வழியிலேயே தற்போதைய பொருளாதார சிக்கல்களுக்கு முன், வெற்றியீட்டிய அகம்பாவங்களுடன் கோட்டா இந்தியா சென்று பிரதமர் மோடியை சந்தித்தபோது கருத்துத் தெரிவித்து வந்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகள் வேண்டுமென பிரதமர் மோடி வற்புறுத்திய போது, எதிர்த்து ஒன்றும் பேசாது மௌனமாகத் தலையசைத்து வந்த கோட்டா, பின்னர் பத்திரிகை நிருபர்களுக்கு 'ஸ்ரீலங்கா தங்களை ஆளுவது அங்குள்ள மக்களின் விருப்பம், ஜனநாயக ரீதியில் அவர்களின் பெரும்பான்மையில் அவர்கள் அதை தெரிவு செய்வார்கள்' எனக் கூறி வந்தார்.

இந்த மனோபாவங்கள் கொண்ட பெரும்பான்மையுடன் இப்படியான அணுகுமுறைகள் எவ்வகையில் பயன் தரும்? இந்தப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டுஇவர்கள்தங்களுடன் சேர்ந்து தங்களது திட்டங்களில் சேர்ந்து பயணிக்க கூடியவர்களையே கவனிப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நடத்தப்பட்டதமிழ்மக்களின்75வருடபோராட்டம் கூட இப்படியான பலன்களைத்தான் தந்தது. இந்த அணுகுமுறைகளும் அவற்றைத்தான் தரும். ஏனெனில் அந்த மனோபாவத்தை மாற்றும் எண்ணம் அவர்களுக்கு – பேரின மக்களுக்கு – இல்லை.

(வளரும்)